



துப்பாக்கி
முத்தம்
மேத்தா
காமிக்ஸ்
ரூ 3/-


அடுத்த வெளியீடு!
மரணத்தின் நிழலில்...!
மேத்தா காமிக்ஸ்
ரூ 1-50
தி மேத்தா பப்ளிகேஷன்,
அண்ணாசாலை, சிவகாசி-626123.


பதிப்பாசிரியர்:
முல்லை தங்கராசன்
விசித்திரப் பந்தயம்
மேத்தா காமிக்ஸ்
ரூ 1-50

# விசித்திரப் பந்தயம்




வியர்வை கசிய, விழிகள் உருள... மற்ற பிரெஞ்சுக் குதிரைகளை பின்னுக்குத் தள்ளிவிட்டு வெற்றிக்கம்பத்தை நோக்கி மின்னலென பாய்ந்தோடியது 'டெலஸ்கோப்'.
திடீரென்று எங்கிருந்து வந்து முளைத்தான் அந்த பிரிட்டன்காரன்.
டெலஸ்கோப் இப்படி திடீரென்று வேகம் பிடித்து ஓடக் காரணம் நிச்சயம் போதை ஊசியாகத் தானிருக்கும்.
வெற்றிக்கம்பத்தருகே ஆத்திரம்கொண்டு கூச்சலிட்ட கும்பலிடையே அமைதியாக - மௌனமாக நின்றுகொண்டிருந்தார் ஜான்சில்வர்.
டெலஸ்கோப் வென்றுவிட்டது.
நம்ப முடியவில்லையே!
போதைமருந்து கொடுத்து குதிரைகளை கொண்டு வரும் பிரிட்டன்காரர்களை நாட்டிற்குள்ளே விட்டவர்களைத்தான் சொல்லணும்.


ஜானின் அருகே இன்னொரு பிரிட்டன்காரர் நின்று கொண்டிருந்தார்.
உள்ளூர்வாசிகள் நம்மை என்னமாய் வெறுக்கிறார்கள் -கேட்டீர்களா? ஜான்
நீ...நீயா...? Q-ஐந்து!... குதிரைப் பந்தய மைதானத்தில்கூட என்னை நிம்மதியாக விட்டு வைக்காதா உங்கள் உளவுப்படை Q-பிரிவு?


Q-பிரிவின் உத்தரவுகளை ஏற்று உளவு வேலை செய்ய ஜானுக்கு விருப்பமே கிடையாது. இப்போதும் தன் வெறுப்பை வெளிப்படுத்த அவர் தயங்கவில்லை.
குதிரைப் பந்தயத்திற்கு தவறாமல் செல்லக்கூடிய நபர் நீ என்பதால் Q பிரிவு இம்முறை உன்னை தேர்ந்தெடுத்துள்ளது.
எனக்கு இஷ்டமில்லை என்று போய்ச் சொல் உங்கள் தலைவரிடம்.


பந்தயக் குதிரைகளுக்கு போதை மருந்து கொடுக்கும் சட்டவிரோத மான பழக்கம் இங்கிலாந்தில் வேரூன்றி இப்போது பிரான்ஸுக் கும் பரவி வருகிறது... இதன் பின்னணியில் இருப்பவர்களை சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வரும் பணிதான் நீ இப்போது மேற்கொள்ளவிருப்பது.
ஊஹூம்... என்னை தொந்தரவு செய்யாதீர்கள்!


தோழமையோடு ஜான் சில்வரின் தோளில் கையை போட்டுக் கொண்டார் 'Q-ஐந்து'
அந்தவிஷமிகளை கண்டு பிடித்து தண்டிக்க உளவுத்துறைக்கு நீ செய்யும் கடைசி உதவி யாக எண்ணிக் கொண்டு இந்தப்பணி யை ஏற்றுக்கொள்..
முடியாது... குதிரைப் பந்தயம் எனக்கொரு பொழுதுபோக்கு. அது அப்படியே இருந்து விட்டுப் போகட்டும்


சட்டென்று 'Q-ஐந்து' ஜான்சில்வரை டெலஸ்கோப்பை நோக்கி முரட்டுத்தனமாக தள்ளினார்.
உன்னை வழிக்குக் கொண்டுவர எனக்குத் தெரியும்.
ஹே...


மேட்டிலிருந்து தள்ளப்பட்ட ஜான தட்டுத் தடுமாறி தன்னை சமாளித்துக் கொள்ள முனைந்த வேளையில்
பிரிட்டன் குதிரையை நோக்கிஓடி வருகிறான் பிடித்து நிறுத்துங்கள் அவனை
ஹே.. இது என்ன புது விவகாரம்?


பந்தய நிர்வாகிகளின் அறைக்கு ஜானை இறுகப்பற்றி இழுத்துச் சென்றனர்.
என்னை கைது செய்யப் போகிறீர்களா..என்ன?
கண்ணில்படும் சந்தேகாபஸ்தமான நபர்களை இழுத்துக் கொண்டு போய் நிர்வாகிகளின் முன் நிறுத்த எங்களுக்கு உததரவு... டெலஸ்கோப்பை நோக்கி நீ பாய்ந்து முன்னேறியதற்குசமாதானம் சொல்லவேண்டியிருக்கும்.
பந்தய நிர்வாகிகளின் அறைக்குள்ளிருந்து வெளியே வந்தான், டெலஸ்கோப்பை ஓட்டிய ஜாக்கி.
'Q-ஐந்து' என்னை இந்த சிக்கலில் மாட்டிவிட்டதன் நோக்கம் விளங்கவில்லையே!
உன் குதிரைக்கு போதை மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நாங்கள் ஆராய்ந்து தீர்மானிக்கும்வரை சற்று வெளியே நில்ஜாக்ஸன


பிரெஞ்சு அதிகாரிகள் மிக கோபமாக தென்பட்டனர். உடனிருந்த ஒரே ஒரு இங்கிலீஸ் அதிகாரியின முகத்தில் சஞ்சலம் குடி கொண்டிருந்தது.
டெஸ்ட்டில் உண்மை வெளிவரப் போவதில்லை... முந்தைய சந்தர்ப்பங்களிலும் அப்படித்தானே நடந்தது.
புதுவகை போதை மருந்தை அவர்கள் உபயோகப்படுத்தியிருந்தாலன்றி உண்மை வெளிவரத்தான் வேண்டும். ஏனோ புரிபடாத புதிராக விஷயம் நம்மை குழப்பிக்கொண்டிருக்கிறது.
நிர்வாகிகளின் அறைக்குள் ஜான் கொண்டு செல்லப்பட்டபோது அதிகாரிகளின் தோழமையற்ற பார்வை அவரை ஊடுருவியது.
சேணம் களையும் இடத்தில் அந்த இங்கிலீஷ் குதிரையை நெருங்கமுரட்டுத்தனமாக முன்னேறி வந்தபோது இந்த நபரைப் பிடித்தோம்.
இவனை சோதனை போடுங்கள்!


தங்கள் காரியத்தை சாதித்துக்கொள்ள Q பிரிவினர் செய்து விட்டிருக்கும் விஷமத்தை ஜான் தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பம் வந்துவிட்டது.
போதை ஊசி மருந்து!
'Q-ஐந்து இரகசியமாக என் பைக்குள் போட்டிருக்க வேண்டும்.
என்மீது இப்போது விழும் பழியை துடைக்க உண்மையான குற்றவாளிகளை நான் தேடிக்கொண்டு போவேன் என்று Q-பிரிவு கணித்திருக்கக் கூடும்.
அடுத்த நடவடிக்கை என்ன என்பதை தீர்மானமாக முடிவு செய்து கொண்ட ஜான்சில்வர் மின்னலென செயல்பட்டார்.
அவர்களுடைய கனிப்பு சரியானதே... எனக்கு வேறு வழியில்லை...
ஹே...
பிடியுங்கள் அவனை...


தன்னைப் பிடிக்க முயன்ற காவலர்களை நோக்கி கையில் அகப்பட்டதை தூக்கி வீசினார் ஜான்.
பிரஞ்சு ஜெயிலில் உட்கார்ந்து கொண்டிருப்பதைவிட Q-பிரிவு இட்ட பணியை செய்துவிட்டுப் போகலாம்.
ஹாஆஆ ..


அலைமோதிக்கொண்டிருந்த கூட்டத்தினூடே புகுந்து ஓடினார் ஜான்... துரத்தி வந்தவர்களும் சளைக்கவில்லை.
டாக்ஸியை நோக்கி ஓடுகிறான்-பிடியுங்கள் அவனை...


வெளியே நின்றிருந்த படகுக்கார் ஒன்றின் அருகே சற்று நிதானித்தார் ஜான்.
போலீஸ்காரர்களின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு இங்கிருந்து தப்புவது எப்படி....


அந்த படகுக்காரின் கதவு சட்டென திறந்து கொண்டது. மறுகணம் ஜான் காரினுள் இழுத்துப் போடப்பட்டார்.
போலீஸாரோடு கண்ணாமூச்சி ஆட்டம் ஆடிக்கொண்டிருக்கிறாயா... பலே...பலே... உள்ளேவா!
தாங்க்ஸ்...!


போலீஸ்காரர் ஒருவர் காரை நெருங்கிவிட்டபோது கார் நகரத் தொடங்கியது... காரை ஓட்டிய நபர் உற்சாகமாக கையை ஆட்டியபடி சிரித்துக்கொண்டே கேட்டான்-
என்னைப் பிடிக்க வரவில்லை நீங்கள்... என்று நினைக்கிறேன்
இல்லை பிரபுவே... நீங்கள் போங்கள்.
காரோட்டியை பார்த்த மாத்திரத்திலேயே வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லிவிட முடிந்தது.
பிரபுவா...?
ம்!...என் பெயர் டென்ஸில்-நண்பர்கள் ‘டிப்பி’ என்று செல்லமாக அழைப்பார்கள்.
போலீஸ் துரத்திவரும் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதை ஒரு வழக்கமாகவே வைத்துக் கொண்டிருக்கிறாயா?
அப்படியில்லை... அதில் சுவாரஸ்யம் இருந்தால் மட்டும்தான்!


கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல் நிதானமாகவே பேசினான் அந்த இளைஞன்... கார் பாரிஸின் வெளிவிளிம்புக்கு வந்துவிட்டது.
பந்தயக்குதிரைகளுக்கு போதை மருந்து கொடுக்கும் நபர் நான் என்று போலீஸார் என்னை துரத்தினார்கள்... இதில் என்ன சுவாரஸ்யம் இருக்கமுடியும் உனக்கு!
நிச்சயமாக இல்லைதான்... அது சட்டவிரோதமான காரியம். அதுசரி... நீ அவசரமாக பிரான்ஸை விட்டு வெளியேற வேண்டும் இல்லையா?
நகருக்கு வெளியே இருந்த சிறிய விமான தளத்தினுள் கார் நுழைந்தபோது வியப்பினால் விரிந்தன ஜானின் விழிகள்!
உனக்கு சொந்தமான விமானம்கூட இருக்கிறதா என்ன?
அதோ அங்கே நிற்கிறது எங்கள் சரக்கு விமானம் இங்கிலாந்துக்கும் கண்டத்தின் பிறபகுதிகளுக்கும் இடையே கால்நடைகளை ஏற்றிச் செல்லும் கம்பெனியின் கூட்டாளிகளில் ஒருவன் நான்.


என்னை போலீஸாரின் பிடியிலிருந்து விடுவித்து நான் இங்கிலாந்து போய்ச்சேர நீ உதவுவதன் காரணத்தை நான் தெரிந்துகொள்ளலாமா?
உன்னை பார்த்தால் குதிரைக்கு போதை மருந்து கொடுக்கும் ஆசாமியாக தென்படவில்லை எனக்கு... போலீஸாரின் கைகளில் காரணமின்றி தொல்லையை அனுபவிக்க வேண்டாமே என்றுதான் இந்த உதவி.
இந்த விமானத்தில் குதிரைகளையும் ஏற்றி அனுப்பப் போகிறீர்களா?
ஆமாம்... என் கூட்டாளி ஒரு டிரெயினர், இன்னும் சில நிமிடங்களில் இங்கே வந்துவிடுவான்.
அரைமணி நேரம் கழித்து ஒரு வேன் அங்கே வந்து சேர்ந்தது.
அதோ வந்துவிட்டார்கள்... பெர்க்ஷைரிலிருந்து இன்று காலைதான் பந்தயத்திற்காக குதிரைகளை இங்கே கொண்டு வந்தோம்.
அப்படியானால் டெலஸ்கோப் உங்களுடைய குதிரையா?


குள்ளமான மனிதன் ஒருவன் குதிரைகள் வேனிலிருந்து இறங்கபபட்டு விமானத்தில் ஏற்றப்படும் பணியை மேற்பார்வையிட்டான்.
எப்படி அத்தனை சரியாக யூகிக்க முடிந்தது உன்னால்... டெலஸ்கோப்புக்கு போதை மருந்து கொடுத்த பழிக்கு ஆளானவன் என்ற வகையில் உனக்கு இந்த விஷயத்தில் அக்கறை இருப்பது இயற்கைதான்!
நான் அக்கறை கொண்டிருப்பது இருக்கட்டும். குதிரையைப்பார்த்தால் இன்னமும் அது மருந்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டதாகத் தெரியவில்லையே!
முரண்டு பிடித்த டெலஸ்கோப்பை ஒருவழியாக விமானத்தில் ஏற்றியானபின் அந்த குள்ள மனிதன் இவர்கள் இருந்த இடத்துக்கு வந்தான்.
சோதனையில் டெலஸ்கோப் உடம்பில் போதை மருந்தின் தடயமே இல்லை என்று முடிவாகிவிட்டது.
இவர்தான் என் கூட்டாளி மிஸ்டர் சாம்ஸன்.
இரண்டு கூட்டாளிகளின் தோற்றத்தில், பேச்சில் நிறைய வேற்றுமை இருந்தது.
இந்த ஆசாமி யார் டிப்பி?
பெயர் ஜான். ..... போலீஸாரின் தொல்லைக்கு ஆளாகவிருந்தான். அதனால் இங்கிலாந்துக்கு இவனை நம் விமானத்தில் ஏற்றிச்செல்லவிருக்கிறேன்.


இடையூறு ஏதுமின்றி அடுத்த
பத்தாவது நிமிடம் விமானம் தன்
பயணத்தை தொடங்கியது.
கஸ்டம்ஸ்
தொல்லை
கிடையாதா
உங்களுக்கு!
நாங்கள் மோசடிப் பேர்வழி
களாக இருந்தால் கடத்தல்
தொழிலில் ஈடுபட்டு இங்
நேரம கோடிக்கணக்கில்
சம்பாதித்திருக்கமாட்
டோமா என்ன?
டிப்பி.. நீ
அதிகமாகப்
பேசுகிறாய்.
போதை மருந்து ஏற்
றப்படவில்லை என்ற
போதிலும் டெலஸ்
கோப் ஏன் முரண்டிக்
கொண்டிருக்கிறது?
அருகிலிருந்த பலகை தடுப்பில் ஓங்கி ஓர் உதைவிட்டது டெலஸ்கோப்.
கட்டு அறுத்துக்
கொண்டுவிட்டது...
ஏற்றப்பட்டிருக்கும் மருந்து எது
வாகினும் அளவுக்கு அதிகமாக
ஏற்றப்பட்டிருக்கிறது.


பணியாளர்கள் குதிரையை மடக்கிப் பிடிக்க முனைந்தபோது முதலுதவி
பெட்டியிலிருந்து ஒரு ஸிரிஞ்சை எடுத்து வந்தான் சாம்ஸன்.
இது காலை உடைத்துக்கொண்டு- நாம் அதை சுட்டு காலிசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமுன்- இந்த புரோமைஸின் இஞ்செக்ஷனை போட்டுவிடுகிறேன்.


ஜான் ஓடோடி வந்தார்.
வெறியாட்டம் ஆடுகிற குதிரையை நெருங்கவே முடியாது பாஸ்
சாம்ஸன்... அந்த ஸிரிஞ்சை இப்படிக் கொடு...


தன்மீது ஆக்ரோஷமாக தாவிய குதிரையிடமிருந்து விலகிககொண்டார் ஜான.
சாம்ஸன் ஒன்றும் நன்றி யுள்ள பிராணியாக தெரிய வில்லை. என் முயற்சி அவன் மீது கொண்டுள்ள சந்தேகத்தை ஓரளவு குறைக்கும் என்று நம்பு கிறேன்.


சட்டென்று பாய்ந்து குதிரையின் பிடரியில் ஊசியை செருகினார் ஜான்.
ஹே .. அபார தைரியம் வேண்டும் இதைச் செய்ய...
அசாத்திய திறமை உள்ளே ஒளிந்து கொண் டிருக்கிறது உன் நண்பனிடம்!


ஓரிரு நிமிடங்களில் குதிரை படிந்துவிட்டது.
ஏதோ என்னாலான பிரதி உபகாரம்!
நன்றி!


Q- பிரிவு ஜான் சில்வரை எங்கே அனுப்ப விரும்பியதோ அதே மையத்தை நோக்கி ஜான் பயணம் செய்து கொண்டிருந்தார். அதை குருட்டு அதிர்ஷ்டம் என்றுதான் குறிப்பிடவேண்டும்.
டென்ஸிலும் சாம்ஸனும் போதை மருந்து சதியில் சம்பந்தப்பட்டவர்களா அல்லது நான்தான் சம்பவங்களின் கோர்வையைதப்பாக யூகித்துக்கொண்டு விட்டேனா... உண்மை எதுவாக இருந்த போதிலும் சிக்கல் என்னை எதிர்கொண்டு காத்திருப்பதாக என் உள்ளுணர்வு எச்சரிக்கிறது.


பெர்க்ஷைரை சென்றடைந்த விமானம் மரங்கள் அடர்ந்த பகுதியில் ஒரு திறந்த வெளியில் மெள்ள தரையிறங்கியது.
அதோ தெரிகிறதே அதுதான் எங்கள் மாளிகை... சாம்ஸனின் குதிரை லாயம் சற்றுத் தள்ளி இருக்கிறது.


விமான தளத்தில் தயாராக இருந்த வேன்களில் குதிரைகள் மாற்றப்பட்டன.
என்னோடு வந்து மாளிகையில் இரண்டு வார காலம் என் விருந்தினராக இருந்து விட்டுப் போயேன்.
டிப்பி... வம்பை விலைக்கு வாங்காதே!


தயாராகக் காத்துக்கொண்டிருந்த காரில் ஏறிக்கொண்டார்கள்.
சாம்ஸனுக்கு என் மீது சந்தேகம்.
பெற்றோரையே நம்ப மாட்டான் அவன்... ரொம்ப அழுத்தமானவன்- ஆனாலும் எங்கள் கூட்டுத் தொழிலில் நல்ல லாபம் வந்து கொண்டிருக்கிறது.
மாளிகையின் சில பகுதிகள் சிதிலமடைந்துகிடந்தன.
வருகிற லாபம் எல்லாம் இந்த பெரிய மாளிகையை பராமரிக்கவே காணாதே...
எப்படியோ சமாளிக்கிறேன்... வேட்டையாடப் போவோமா?
அன்றும் மறுநாளும் சுற்றியிருந்த காட்டுப்பகுதியில் இருவரும் முயல் வேட்டையாடினர்.
சுடுவதில் வல்லவனாக இருக்கிறாயே!
உண்மையைச் சொல்வதானால் நான எல்லாவற்றிலுமே வல்லவன்தான்!


மூன்றாம் நாள்... டென்ஸிலின் லாயத்திலிருந்து இரண்டு குதிரைகளில் ஏறி சில தீரச்செயல்களில் ஈடுபட்டனர்.
திறமையாக குதிரை ஓட்டுகிறாய்... ஆனால் ரொம்பவும் ஆபத்தான காரியங்களை செய்கிறாய்.
இந்த முள்வேலியை உன்னால் தாண்ட முடியுமா, ஜான்!


சவாலை ஏற்றுக்கொண்டார் ஜான்.
நானும் கோழையல்ல!
உன் மனோதிடத்தை பாராட்டுகிறேன்!


இந்த மூன்று நாள் பழக்கத்தில் ஒருவர் மீது மற்றவர் கொண்டிருந்த மதிப்பு பன்மடங்காகப் பெருகியது! -
இருவருக்குமிடையே ஒற்றுமையிலும் ஒரு வேற்றுமை இருக்கிறது- ஆபத்தான காரியங்க்ளில் ஈடுபட எனக்கு காரணம் தேவையில்லை... ஆனால் உனக்கு ஒரு காரணம் தேவைப்படுகிறது.
சரியாகச் சொன்னாய்.
ஓரிரு தினங்களுக்குப் பின் ஓர் இரவு டென்ஸில் தன் மாளிகையில் விருந்தளித்தான். டென்ஸிலின் மூதத சகோதரியின் அருகில் அமர்ந்திருந்தார் ஜான.
இம்மாதிரி ஆடம்பரமான விருந்தளிக்க டென்ஸிலுக்கு எப்படி கட்டுப்படியாகிறதோ தெரியவில்லை!
சரக்கு விமானம் போதிய லாபம் சம்பாதித்து கொடுப்பதாக உங்கள் தம்பி கூறினான்!


அவளுடைய கருத்தை அறிவ
தில் ஆர்வம் காட்டினுர் ஜான்.
லாயத்திலுள்ள குதிரைகளுக்கு கொள்ளு வாங்கக் கூட அந்தப்பணம் போதாது
ஒரு அறை நிறைய பழைய கலை பொக்கிஷங்கள் இருக்கின்றன அவன் வசம்... வெளி நாட்டில் நல்ல விலைக்குப் போகக்கூடியவை அவை!
கலைப்பொக்கிஷங்களை ஏற்றுமதி செய்வது சட்டப்படி குற்றம் என்று தெரியுமில்லையா உனக்கு - சட்ட விரோதமான காரியத்தைச் செய்யச் சொல கிருயா என்னை?
விருந்து சாப்பிட்டு வெட்டிப் பொழுது போக்கிக்கொண்டிருந்தால் Q-பிரிவு சும்மா வேடிக்கை பார்த்துகொண்டிராது. பந்தயக் குதிரைகளுக்கு போதையூட்டும் விஷமிகளை கண்டுபிடிக்கும் முயற்சியில் இனியாவது இறங்க வேண்டும்.
இரவு எல்லோரும் தூங்கச் சென்றபின் தன் படுக்கை
யறையிலிருநது மெள்ள நடந்து வெளி வந்தார் ஜான்


கலைப்பொக்கிஷங்கள் இருந்த
அறை தாழிடப்பட்டிருந்தது.
அதை திறந்து உள்ளே நுழை
வதில் ஜானுக்கு அதிக
முயற்சி தேவைப்படவில்லை.
உள்ளே என்னதான் இருக்
கிறதென்று பார்ப்போம்!
பென்சில் டார்ச் உமிழ்ந்த
வெளிச்சத்தில் ஒவ்வொரு கலைப்
பொருளாக ஆராய்ந்தார். அனைத்
தும் விலைமதிக்க முடியாத அரிய
சிலைகள்... ஓவியங்கள்...
இது அட... மைக்கேல் ஆஞ்ச
லோவின் படைப்பல்லவா இது
ஒன்று மட்டுமே அரை மில்லி
யன் மதிப்பு பெறுமே
திடீரென்று அவர்மீது பாய்ந்தது ஓர் உருவம்
ஹே...


ஊப்ப்...
வெளிச்சத்துக்கு வா... யார் நீ என்று தெரிந்து கொள்ள வேண்டும்.
எதிர்பாராத தாக்குதலால் முதலில் நிலை குலைந்து சரிந்த ஜான் மறுகணமே சுதாரித்துக்கொண்டு எழுந்தார். எதிரியை சுலபமாக மடக்கிவிட்டார்.


சுவிட்சைப் போட்டதும்-
டென்ஸில் நீயா?...
சாம்ஸன சொன்னது சரியாகப் போய்விட்டது... இங்கேயுள்ள கலைப் பொக்கிஷங்களை கிளப்பிக் கொண்டு போவதுதானே உன் திட்டம்.


டென்ஸிலின் கண்களில் கனல் தெறித்தது.
நான் ஒரு திருடனல்ல என்பது உனக்குத் தெரியும்.
உன்னைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது... நம் முதல் சந்திப்பின்போது போலீஸ் உன்னைத் துரத்தி வந்தது தெரியும்-தயவு செய்து உடனே வெளியேறி வேறெங்காவது போய்விடு.


லேசாக முரண்டிப் பார்த்தார் ஜான்!
இந்த நள்ளிரவில் இங்கிருந்து நான் எப்படிப் போவது- என்னிடம் கார் கூடக்கிடையாது.
அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை..எதையும் சமாளிக்கும் திறமை உன்னிடம் இருப்பது தெரியும் எனக்கு


நாமிருவரும் நல்ல நண்பர்கள் என்று எண்ணியிருந்தேன் டென்ஸில்.
நானும்தான். ஆனால் என் எண்ணம் தவறு என்று நீ நிரூபித்து விட்டாய். நீ எங்கு போவாயோ தெரியாது... என்னை விட்டுத்தூர விலகிச் சென்றுவிடு அவ்வளவுதான்!
ஜான் வெளியேறிய போது வாசலில் வந்து நின்றான் டென்ஸில்.
இப்படியொரு அசம்பாவிதம் நிகழ்ந்துவிட்டதற்காக பெரிதும்வருந்தினார் ஜான்... அவருக்கு டென்ஸிலின்மீது ஒரு பிடிப்பு ஏற்பட்டிருந்தது.
என் யூகம் சரியாக இருக்குமேயானால் இப்போது நான் போகுமிடத்தில் உனக்கும் சேர்த்துத்தான் தொல்லை தரப்போகிறேன் என்பது உறுதி.
போதையூட்டப்பட்ட குதிரைகளை பந்தயத்தில் ஓட்டி சம்பாதிக்கும் பணத்திலிருந்துதான் டென்ஸிலின தேவைகக்கு பணம்வருகிறதென்றால் அந்த சட்டவிரோதியின் செயலில் டென்ஸிலுக்கும் பங்கு இருக்குமோ?
GEARY
CING STABLE
சாம்ஸனின் பயிற்சி லாயம் அருகில்தான் இருந்தது.


லாயம் ஆள் அரவமில்லாமல் இருண்டு கிடந்தது.
இங்கே ஏதாவது துப்பு கிடைக்கிறதா என்று பார்ப்போம்.
அங்கேயிருந்த ஸ்டோர் அறையை திறந்து உள்ளே புகுந்தார். அவரைத்தடுக்க அங்கே யாருமில்லை
போதை மருந்து பாட்டில்களை இங்கே அடுக்கி வைத்திருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது மடமை.


தொங்கிக் கொண்டிருந்த சேணங்களை விலக்கிப் பார்வையை கூர்மையாக்கி ஆராய்ச்சியைத் தொடர்ந்த போது......
ஹே... ஒரு ரைபிள்- அதன் முகப்பில் சிறு மாற்றம்... குதிரை லாயத்தில் இதற்கு என்ன வேலை இருக்கமுடியும்?
சற்றுமேலே இருந்த மாடத்திலிருந்து அடுத்து எடுத்த பொருட்கள் அவருடைய வியப்பை அதிகரித்தன.
இஞ்செக்ஷன ஊசி மாதிரி இருக்கிறது இது.
திடீரென்று அறையினுள் ஒளிவெள்ளம் பாய்ந்தது. யாரென்று பார்க்கத் திரும்பிய வேளையில் அந்த ஊசியை பைக்குள் போட்டுக்கொண்டார் ஜான்.
சாம்ஸன்.
இப்படித் திருட்டுத்தனமாக நுழையும் ஆசாமிகளை கண்டால் எனக்கு கொஞ்சமும் பிடிக்காது என்று உன் தோழன் உன்னை எச்சரிக்கவில்லையா?


சாம்ஸனின் கையில துப்பாக்கி இருந்தபோதிலும் அதை அவன அவசரப்பட்டு உபயோகித்துவிட மாட்டான் என்ற நம்பிக்கையோடு சரேலென வெளியே பாய்ந்தார் ஜான்.
சே... இன்று எதிலுமே அதிர்ஷ்டமில்லை எனககு
ஹே...


ஜான் ஸ்டோர் அறைக்கு வெளியே பாய்ந்து தரையில் காலூன்றியபோது லாயம மொத்தமும் விளககொளி பரவியது.
வெளி ஆள்... விடாதே பிடி
உள்ளே நுழைநதபோது 'எச்சரிக்கை அமைப்பு' ஏதும் இயக்கி விடப் பட்டிருக்குமோ?


ஜானைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள்.
வகையாக மாட்டிக் கொண்டு விட்டேன்.


சாம்ஸன் நெருங்கி வந்தான்...அவனுடைய கண்கள் பல்லியின் கண்களைப்போல் உயிரோட்டமிழந்து காணப்பட்டன.
யாருடைய கையாளாக நீ இங்கு வந்தாயோ தெரியாது-அவர்கள் இனி உன்னைப் பார்க்கப் போவதில்லை...


மரத்தடுப்பின் மீது ஜான் சாய்ந்து கொண்டிருந்தார்... கையிலிருந்த ஆயுதத்தை பயங்கரமாக நீட்டிக்கொண்டு முன்னேறிவந்தான் சாம்ஸன்...
குதிரைகளுக்கு போதைமருந்து ஏற்றுபவனாக இருக்கலாம் நீ... ஆனால் கொலை செய்ய மனோதிடம் தேவை...
சந்தேகமா உனக்கு?
ஜான் கழுத்தை திருப்பமுடியாதபடி அந்த இரும்புக்கருவியின் முனைகள் மரத்தடுப்பில் ஆழப்பதிந்தன.
ஊப்...
அவருடைய புஜத்தில் ஊசி ஒன்று குத்தப்படும் உணர்ச்சியை தொடர்ந்து சுயஉணர்வு மெள்ள நழுவலாயிற்று.
புரோமைஸின் குதிரைகளை எப்படிப் படிய வைக்கிறதோ அப்படித்தான் மனிதர்களையும் படிய வைக்கிறது... குட் பை... ஜான்!


ஜான் சில்வருக்கு சுயஉணர்வு திரும்பியபோது பெரிய மரப்பெட்டி யினுள் தான் கிடத்தப்பட்டிருப்பதை உணர்ந்தார்.
ஓ... சவப்பெட்டியே தயாரித்து விட்டார்களா!


மரணத்துக்கும் தனக்குமிடையே அதிக இடைவெளி இல்லை என்கிற உண்மை அவரை துரிதமாக செயல்படத் தூண்டியது.
மூடியை அகற்றியாக வேண்டும்... அல்லது சீக்கிரமே மூச்சுத் திணறி செத்துப்போய் விடுவேன்.


அவர் விட்ட உதை தாங்காமல் மூடி இடம் பெயர்ந்து வழிவிட்டது...பெட்டிக்குள்ளிருந்து தலையை வெளியே நீட்டியபோது அவரை நோக்கி குனிந்திருந்தது ஒரு முகம்.
ஜான்...!
நீயா...?!
FRAGILE
பாய்ந்து எழுந்த ஜான் ஆத்திரத்தோடு பாய்ந்தார்.
ஏதோ வசதியான குடும்பத்தை சேர்ந்த விளையாட்டுப் பிள்ளை என்று உன்னைப்பற்றி எண்ணியிருந்தேன்... சாம்ஸனின் கொலைச்செயலுக்கு கூட்டாளியாகவும் இருப்பாய் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவேயில்லை.
என்னை நீ தப்பாக புரிந்துகொண்டு விட்டாய்.. பெட்டிக்குள்ளே நீ இருக்கும் விஷயமே எனக்குத் தெரியாது.. என்னை நம்பு.
FRAGI


அப்போதுதான் ஜானுக்கு தெரியவந்தது தாங்கள் இருப்பது பறந்து கொண்டிருக்கும் விமானத்தில் என்று.
விமானம் கிளம்பும்போது இந்த பெட்டியை கொண்டுவந்தான் சாம்ஸன்... பயணமுடிவில் பெட்டியை டெலிவரி செய்ய தான் ஏற்பாடுகள் செய்துவிட்டிருப்பதாக சொல்லிவிட்டுப் போனான்.
விமானம் எங்கே போகிறது?
விமானம் அப்போது இத்தாலியின் வடபகுதியிலிருந்த மலைப்பிராந்தியத்தின் மேலே பறந்து கொண்டிருந்தது.
லெக்கோ என்னுமிடத்துக்கு... அங்கே எங்களோடு வியாபார தொடர்புள்ளவர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள்
சாம்ஸன் எங்கே போனான்?
அவனையும் இரண்டு குதிரைகளையும் பாரிஸில் இறக்கிவிட்டு பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறோம். இன்று பிற்பகல் அங்கே ஒரு பந்தயத்தில் கலந்துகொள்கிறான் சாம்ஸன்.
ஓகோ... அப்படியா?


இத்தாலிக்கு ஏற்றுமதி செய்து அங்கே எப்படியாவது என்னைத் தீர்த்துக்கட்டி விடுவது சாம்ஸனின் நோக்கமாக இருக்கலாம்... இதுவிஷயத்தில் உனக்குப் பங்கில்லை என்று நீ கூறுவதை நான் அப்படியே ஏற்றுக கொள்கிறேன்.
ஆனால் சாம்ஸனின் மற்ற சட்டவிரோதமான செயல்களில் உன் பங்கு என்ன?
உன் கலைக்கூடத்திலிருந்த மைக்கேல் ஆஞ்சலோவின் படைப்பல்லவா? இது...ஓகோ ... இப்போது புரிகிறது. கலைப்பொருள்களை சட்டத்தின் பிடியில் அகப்படாமல் நாடுகடத்தி நல்ல விலைக்குவிற்க அருமையான வழிதான் இது- சந்தேகமேயில்லை
குதிரையின் மேலிருந்த முரட்டு விரிப்பை எடுத்துப் பிரித்தார் ஜான்.


ஒரு சிறு விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியது.
இதைப்பற்றி பிறகு பேசலாம் ஜான்...உனக்காக சாம்ஸனின் ஆட்கள் அதோ அங்கே காத்துக்கொண்டிருக்கிறார்கள் பார்.


ஜானின் கண்களில் குரோதம் கொப்பளித்தது.
குதிரைகளோடு இந்த பெட்டியையும் இறக்குவார்களில்லையா அவர்களுக்கு ஓர் அதிர்ச்சி காத்துக்கொண்டிருப்பது தெரியாது...
RAGILE


சிலை இருந்த ஒரு பெட்டியை திறந்தார் ஜான்.
அவர்களிடம் சென்று இரண்டு நிமிட நேரம் ஏதாவது பேசிக் கொண்டிருடிப்பி... அதற்குள் வேலையை முடித்துக்கொண்டுவிடு கிறேன இன்னமும் நான் பெட்டிக் குள் இருப்பதாக-அதே சமயம் அந்த உண்மை இன்னமும்உனக்கு தெரியாது என்பதாக நடந்து கொள்ளவேண்டும் நீ
ஜானின் விருப்பப்படி நடந்துகொள்வதென தீர்மானித் துக் கொண்டான் டென்ஸில்.
குதிரைகள் ஆசுவாசப்படுத் திக்கொள்ள ஓரிரு நிமிடங் கள் அவகாசம் கொடுத்து பிறகு அவற்றை இறக்க வேண்டும்.
இம்முறை ஏதோ விசேடமாக வந்து இறங்குவதாக சொல்லப்பட்டதே!


பெட்டியை கீழிறக்க இத்தாலியர்கள் உள்ளே வந்தபோது ஜான் அங்கே இல்லை.
மேலே உள்ள எச்சரிக் கையை கவனமாக படி.
கீழே போட்டுவிடக் கூடாது ஆமாம்!


அந்தப்பெட்டியை கவனமாக வேனில் ஏற்றிக்கொண்டனர்.
ஜான் மீண்டும் அந்தப் பெட்டிக்குள் படுத்துக் கொண்டிருப்பானே... இது என்ன விளையாட்டு?
மற்ற பெட்டிகளையும் குதிரைகளையும் இனி இறக்கலாம்.


பைலட்டும் எஞ்சினியரும் கீழே உலவிக்கொண்டிருந்தார்கள். டென்ஸில் திடீரென ஒரு முடிவெடுத்தான்.
நானும் உங்களோடு வருகிறேன்
தாராளமாக... குற்றச் செயல்களில் நாமெல்லோரும் கூட்டாளிகள் தானே!
உணவை முடித்துக் கொண்டு திரும்பு. பயணத்தை தொடர நாங்கள் இங்கே காத்துக்கொண்டிருக்கிறோம்-சீக்கிரமே திரும்பி வந்துவிடு!
மலைப்பிராந்தியத்தில் எங்கோ பத்திரமான இடத்தில் என் கலைப் பொக்கிஷங்களை உங்கள் முதலாளி பதுக்கி வைக்கிறார் என்று நினைக்கிறேன்.
ஆமாம்... அங்கேதான் நாம் போகிறோம்... வழியில் இன்னொரு முககிய பணியை செய்துமுடிக்க வேண்டியிருக்கிறது.
இங்கே ஏன் வேனை நிறுத்துகிறீர்கள்?
சாம்ஸனுக்காக வழியில் ஒரு பணியை செய்யவேண்டியிருக்கிறது என்று சொன்னேனில்லையா?
மலைமீது ஏறிக்கொண்டே சென்றது வேன்... சுமார்- 10 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்தபின் ஓர் கொண்டை ஊசி வளைவு வந்தது. கீழே இருநூறு அடி சரிவு...


இத்தாலியர்களை தொடர்ந்து டென்ஸிலும் வெளியே குதித்தான்... அவர்கள் முகத்தில் தாண்டவமாடிய கொலைவெறி அச்சமூட்டுவதாக இருந்தது.
சாம்ஸனை உங்களுக்கு ரொம்பத் தெரியுமோ?
எங்கள் பழைய நண்பர்.... நீங்கள் கலைப்பொக்கிஷங்களை சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்யவிரும்புவதாக சொன்னபோது உங்களோடு எங்களுக்கு தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்ததே அவர்தான்.
பெட்டியை இறக்கி அதை பாதை விளிம்பிலிருந்த ஓரடி சுவரின் மீது வைத்தார்கள்.
அதை என்ன செய்யப்போகிறீர்கள்?
நிறைய கேள்விகள் கேட்கிறாய் நீ!
ஒருவன் பெட்டியின் மூடியை அகற்றி மேலோட்டமாகப் பார்வையை செலுத்தி உள்ளே ஆள் இருப்பதை உறுதிசெய்துகொண்டான்.
உள்ளே ஒரு ஆசாமி இருக்கிறான்!
பிணம் போல அசையாமல் கிடக்கிறான்.... முகம் எல்லாம் வெளிறிப் போயிருக்கிறது.


அந்தப்பெட்டியை அபபடியே மலைசசரிவில் கொட்டினர்.
பாவம்! அவனுடைய கஷ்டத்திலிருந்து விடுதலை கொடுத்து மோட்சத்துக்கு அனுபபுவோம்
சீ... அரக்கத்தனமான காரியம் உங்களை


பெட்டியிலிருந்து நழுவிய உருவம் சரிவை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.
பாவிகள் அவனை கொன்று விட்டார்களே!..


டென்ஸிலின் கோபம் எரிமலையாகப் பொங்கியது!
சைத்தான்களே உங்களை நான் மன்னிக்க முடியாது.
சாம்ஸன் இந்தக்காரியத்தை செய்ய நிறைய பணம் கொடுத்தார்... செய்தோம்- நீ அவருடைய கூட்டாளி இல்லையா என்ன?
இரண்டு முரடர்களுக்கு எப்படி அந்த இளைஞன் ஈடு கொடுக்க முடியும்!
கொலைச்செயல்களுக்கு நான் கூட்டாளி இல்லை...பந்தயக் குதிரைகளுக்கு போதை மருந்து ஏற்றுகிறான் சாம்ஸன் என்ற உண்மைகூட எனக்கு சமீபத்தில் தான் தெரியும்
அந்த உண்மையினை தெரிந்து கொண்ட உன்னை கொல்வதைத் தவிர வேறு வழியில்லை.


அப்போதுதான் அந்த முரடர்களை ஓர் அதிர்ச்சி தாக்கியது.
யாரையும் அத்தனை சுலப மாக கொன்றுவிட முடியாது தம்பிகளா!
ஆ...ஆ...
ஜான்!
ஜான் கொடுத்த கராத்தே அடிகள் எதிரிகளை நொடியில் வீழ்த்திவிட்டன...
அப்படியானால் அந்தப் பெட்டிக்குள் இருந்தது யார்?
போய் எட்டிப் பார்... புரியும்...


இன்னொரு பெட்டியிலிருந்த சிலை அல்லவா அது...
முகம் வெளிறிப் போயிருககிறது என்று சொன்னானில்லையா. உள்ளே இருந்தது அந்த பளிங்கு சிலைதான்
கீழே தள்ளப்பட்ட உருவம் அதல பாதாளத்தில் உடைந்துகிடந்தது.


ஜானும் டென்ஸிலும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு விட்டதால் நேச பாலம் அவர்களை ஒன்று சேர்த்தது.
இந்த சம்பவங்களிலிருந்து நான் புரிந்துகொண்ட உண்மை யாதெனில் நாம் இருவரும் உன் கொலைகார கூட்டாளியின் எதிர் அணியில் தோளோடு தோள் நிற்க வேண்டியவர்கள்.
சரியாகச் சொன்னாய்!


குதிரைகள் இருந்த வேனை ஜான் ஓட்டலானார்.
அந்த இரண்டு ஆசாமிகளையும் என்ன செய்வது?
அவர்களுடைய 'பாஸ்' அவர்களுக்கு ஒரு வழி செய்துவிடுவான் நாம் செய்துவிட்டிருக்கும் காரியங்கள் அவனுக்கு தெரியவரும் போது அவன் கொதித்து எழக்கூடும்
வேன் வந்த பாதையிலேயே திரும்பியது.
விமான தளத்துக்கே திரும்பிச் செல்கிறோமா?
ஆமாம்... அங்கிருந்து உன் விமானத்தில் பாரிஸ் செல்கிறோம். சாம்ஸன் கலந்து கொள்ளும் பந்தயத்தில் நாமும் கலந்துகொள்ளப் போகிறோம்.


நாற்பது நிமிடங்களுககுப்பின் ஜானும் டென்ஸிலும் பாரிஸ் நோக்கி பறந்து கொண்டிருநத விமானத்தில் இருந்தனர்.
ஜான்... நீ ரொம்ப சுறுசுறுப்பு.
குதிரைகளுககு போதை மருந்து கொடுக்கும் ஆசாமிகளை கையும் களவுமாக பிடிக்க வேண்டுமானால் நாம் இத்தனை விரைவில் போனால்தான் சாத்தியமாகும்.
குதிரைகளும் டென்ஸிலின் கலை பொக்கிஷங்களும் திரும்பவும் விமானத்தில் ஏற்றப்பட்டிருந்தன.
குதிரைகளை அங்கேயே விட்டுவிட்டு கிளம்பியிருந்தால் இன்னும் சற்று முன்னதாக கிளம்பியிருக்கலாம்.
இல்லை... காரியமாகத்தான் அவைகளை நம்மோடு கொண்டுபோக முடிவு செய்தேன்.


கலைப்பொக்கிஷங்களை சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்யும் காரியமும் இத்தோடு ஒரு முடிவுக்கு வந்து விடும் இல்லையா?
அந்தப பிரச்னை பற்றி சிந்திக்க இப்போது அவகாசமில்லை...
Q-பிரிவு ஜானை உளவு வேலையில் கட்டாயமாக ஈடுபடுத்துவதற்கு முன் அவர் விமான மோட்டியாக பணியாற்றிக்கொண்டிருந்ததால் அந்த அனுபவம் இப்போது அவருக்குக் கை கொடுத்தது.
குதிரைக்கு போதை மருந்து கொடுப்பவர்களை விரட்டிக்கொண்டு போவது... விமானம் ஒன்றை கடத்திக் கொண்டு செல்வது இதையெல்லாம் நீ செய்ய ஒரு காரணம் இருக்கவேண்டுமே!
விமானம் உனனுடையது. எனவே அதை நான் கடத்திக்கொண்டு போவதாக சொல்ல முடியாது. விமான சிப்பந்திகள் உணவருந்திவிட்டு வரும்வரை காத்துக்கொண்டிருக்க அவகாசமில்லாததால் நானே கிளப்பிக்கொண்டு வந்துவிட்டேன். அவ்வளவுதான்!
ஆல்ப்ஸ் மலைக்கு மேலே பதினைந்தாயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தது விமானம்.



தன் தொழிலை அந்நியர் அறிந்து கொள்வதை ஜான் விரும்புவதில்லை. ஆனால் கடந்த சில நாட்களில் டென்ஸில் அவருக்கு மிக நெருக்கமாகிவிட்டிருந்தான்.
முன்பே நீ குறிப்பிட்டிருக்கிறாய்-ஆபத்தான காரியங்களில் என்னை நான் ஈடுபடுத்திக் கொள்ள ஒரு காரணம் தேவைப்படுகிறது என்று. அது உண்மை தான்.
ஒயிட்ஹாலில் இயங்கிவரும் Q-பிரிவு உளவுப்படையின் ஒற்றனாக நான் பணியாற்றிக் கொண்டிருப்பதுதான் அந்தக்காரணம்.
ஓ... துப்பறிவாளரா! பொறாமையாக இருக்கிறது எனக்கு.
சுமார் ஒன்றரைமணி நேர பயணத்திற்குப்பின் மக்கள் வெள்ளம் அலைமோதிக்கொண்டிருந்த சாரண்ட் குதிரைப் பந்தய மைதானம் கீழே தெரிந்தது.
போலீஸ் உதவியை நாட அவகாசம் இல்லை.
போதை மருந்து கொடுப்பவர்களை கையும் களவுமாக பிடிக்கும் வாய்ப்பை இழந்துவிட்டோம் என்று நினைக்கிறேன் பந்தயம் ஏற்கனவே தொடங்கி குதிரைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன பார்.


ஆனால் ஜான் அர்த்த புஷ்டியோடு மெள்ள நகைத்தார்.
பாரிஸ் விமான நிலையத்தில் தரை யிறங்கி பந்தய மைதானத்துக்கு நாம் வந்து சேருவதற்குள் பந்தயம் முடிந்து எல்லோரும் வீடு போய் சேர்ந்து விடுவார்கள்.
பாரிஸ் விமான தளத்துக்கு நாம் போகப் போவதாக யார் சொன்னது?


கீழே குதிரைகள் அசுர வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தன
பாரிஸ் விமான தளம் தானே அருகில் உள்ளது!
குதிரைப்பந்தய திடல் இருக்கும் போது விமானத்தை இறக்க விமான தளத்தை ஏன் தேடிப் போகவேண்டும்.


ஜானின் வார்த்தைகளால் கலவரப்பட்டுப்போன டென்ஸில் கேட்டான்.
அப்படியானால் விமானத்தை இங்கேயே இறக்கப்போகிறாயா என்ன?
நேராக... சீராக இருக்கிறது இடம், இதைவிட விமானத்தை இறக்க வேறிடம் வேண்டுமோ?


முதல் வளைவை கடந்துவிட்டன குதிரைகள்...
நிச்சயமாக நீ ஒரு பயங்கரமான ஆசாமிதான்.
சாம்ஸனும் அவனுடைய தோழர்களும் இங்கேதானிருப்பார்கள்... அவர்களை கையும் களவுமாகப் பிடிக்க இந்த சந்தர்ப்பத்தை விட்டால் இன்னொரு சந்தர்ப்பம் கிட்டாமலே போய்விடலாம்..


விமானம் உயரமிழந்துகொண்டே வந்தது.
ஓ.கே எல்லாம் நல்லபடியாகவே நடந்து வருகிறது...
விமானம் ஒன்று திடீரென்று பந்தய தடத்தில் வந்து இறங்கியதை கண்ட பார்வையாளர்கள் நம்ப முடியாமல் திணறினர்கள்.
ஹே... இதென்ன...?
விமானத்தின் வேகத்தை குறைத்தார் ஜான். அவருடைய பார்வை யாரையோ தேடியது.
தடத்திற்கும் உள்ளடங்கிய மைதானத்திற்கு விமானத்தைக் கொண்டு செல்வோம்...சாம் லீன அங்கே தான் நான் எதிர் பார்க்கிறேன்.


உள் மைதானத்தில் மரம் செடி கொடிகள் அடர்ந்திருந்த பகுதியை நோக்கி விமானத்தைக் கொண்டு சென்றார் ஜான்.
சாம்ஸனின் லாயத்தில் ஒரு ரைபிளையும் மருந்து ஏற்றும் ஊசியையும் கண்டுபிடித்தேன். ரைபிள் முனையில் போதை மருந்து நிரம்பிய ஊசியை பொருத்தி குதிரைகள் கடைசி வளைவில் திரும்பும்போது உள் விளிம்பில் ஓடிக்கொண்டிருக்கும் குதிரையை சுடுவதன் மூலம் போதை மருந்தை உட்செலுத்தி அதன் வேகத்தைப் பெருக்கி அது மற்ற குதிரைகளை முந்திக்கொண்டு சென்று வெற்றி பெறச் செய்ய முடியும் என்பது என் யூகம்.
ஜானின் பேச்சைக் கேட்ட டென்ஸில் வியப்பில் பேச்சிழந்து போனான் ஒரு கணம்.
அவர்கள் அங்கே ஒளிந்திருப்பதாக வைத்துக் கொண்டாலும் அருகே செல்ல விமானம்பயனபடாதே.
நான் குதிரைகளை நம்முடன் கொண்டு வந்ததற்கு காரணம் அதுதான்.


விமானம் தரை இறங்கிய சில வினாடிகளில் இருவரும் குதிரையில் ஏறி மின்னல் வேகத்தில் சென்றனர்
அம்மாடியோவ்... என்ன வேகத்தில் செல்கிறாய்!
என் யூகம் சரியாக இருக்குமேயானால் அந்தப் புதருக்குப் பின்னால் அவர்கள் இருக்கக் கூடும்.
ஜானின் யூகம் நூற்றுக்கு நூறு சரி. சாம்ஸனின் லாய ஊழியர்கள் அங்கே இருந்தனர்
ஹே... அங்கே மைதானத்தில் ஒரு விமானம் வந்து இறங்கியிருக்கிறது. டெனஸிலின விமானம் போல் இருக்கிறது.
ஊஹூம்... இருக்காது.


ஓடி வந்து கொண்டிருந்த பந்தய குதிரைகளில் குறிப்பிட்ட ஒரு குதிரையை குறி வைத்துக்கொண்டிருந்தான் ரைபிளை பிடித்துக் கொண்டிருந்தவன்.
பின்னாலிருந்து மூன்றாவதாக வந்து கொண்டிருக்கிறது 'ஸ்டார்' போதை மருந்து ஊசியை சரியாக ஏற்றி விட்டோமேயானால் மற்ற குதிரைகளை முந்திக்கொண்டு ஓடி நமக்கும் லாபம் சம்பாதித்துக் கொடுத்துவிடும்.


ஜானும் டென்ஸிலும் சமீபித்து விட்டார்கள்.
அதோ... அவர்கள்
அவர்கள் மீது ஓட்டு குதிரையை!


குதிரைகள் தங்களை நோக்கி நாற்கால் பாய்ச்சலில் ஓடி வருவதைக் கண்ட ஊழியர்கள் மிரண்டு போய் சிதறி ஓடினர்.
டென்ஸில்...! இன்னொரு ஆசாமி- நம் தலைவர் இத்தாலிக்கு அனுப்பி வைத்த திருட்டுப்பயலல்லவா...
அவன் இந்நேரம் எம லோகம் போயிருக்க வேண்டுமே!


ரைபிளை வைத்திருந்தவன் ஜானின் குதிரையை குறிவைத்துச் சுட்டான்.
அந்தக் குதிரைக்கு போதை மருந்தை ஏற்றிவிடுகிறேன்... அவன் கதி அதோ கதிதான்...
ஜான்... டிரக் இங்கே விரைந்து வருகிறது... பார்...


டிரக்கில் சாம்ஸன் இருந்தான... அவன் முகத்தில் கலவரம் விரவி நின்றது...தோழர்களுக்கு உதவ வந்து கொண்டிருந்தான்.
விமானம் தரையிறங்கியதை கவனித்தேன்... இங்கே என்ன நடக்கிறது?
மோசம் போனோம் பாஸ்... தப்பியோடினால்தான் உயிர் பிழைக்க முடியும்.


போதை மருந்து ஏற்றப்பட்டதால் ஜானின் குதிரை பைத்தியம் பிடித்து விட்டதுபோல் முரண்டியது... அதை அடக்க முடியாமல், திணறினார் ஜான்.
எல்லோரும் டிரக்கில் ஏறிக் கொண்டார்கள். அவர்கள் 'பாடக்'கை சென்றடைந்து விட்டால் பின்னர் அவர்களுடைய சதிச்செயலை நிரூபிக்க முடியாமற் போய்விடும்.
அவர்களை தடுத்து நிறுத்தியாக வேண்டும்-


குதிரையை அடக்கி அசுரவேகத்தில் செலுத்தினார் ஜான்...
என் குதிரைக்கு வேகம் போதாது ஜான்.
இதற்கு போதை மருந்து கொடுத்தவனுக்கு என் நன்றி!


போதை வசப்பட்ட குதிரை புயல் வேகத்தில் ஓடி டிரக்கை நெருங்கியது.
பிடித்து விடுவார்கள் போலிருக்கிறது... இன்னும் வேகமாக ஓட்டுங்கள்...
ஊஹூம்... இந்த கரடு முரடான புல்வெளியில் இதற்கு மேல் வேகமாக ஓட்டினால் டிரக் கவிழ்ந்து விடும்.


ஜானின் குதிரை டிரக்கோடு ஈடு கொடுத்து ஓடத் தொடங்கிய போது சாம்ஸனின் கண்களில் கலவரம் பன்மடங்காகியது.
உன் போதை மருந்து பிரமாதமாகத்தான் வேலை செய்கிறது சாம்ஸன்... ஆனால் இந்தக் குதிரைதான் உன்னால் போதையூட்டப்பட்ட கடைசிக் குதிரையாக இருக்கும்
வெற்றிக் கம்பத்தருகேயிருந்த மரக்கட்டைகளாலான தடுப்புச் சுவரில் மோதி டிரக் கவிழ்ந்தது...
ஹே...


போலீஸாரும், அதிகாரிகளும், பொதுமக்களும் அங்கே விரைந்தோடி வந்தனர்.
அங்கே என்ன கலாட்டா?


சாம்ஸன் எழுந்து ஓட முயன்றான்... ஜான் விடுவதாக இல்லை...
ஹே... எனக்கு நீ கொடுத்ததையெல்லாம் திரும்ப வாங்கிக் கொள்ளாமல் ஓடினால் எப்படி?


சாம்ஸனின் மீது பாய்ந்தார் ஜான்.
இனியும் நீ தப்ப முடியாது.
ஆ ஆ ஆ...


போலீஸார் அனைவரையும் வளைத்து விட்டார்கள்.
எல்லோரையும் கைது செய்யுங்கள்.
இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் குதிரைகளை பந்தயத்தில் ஓட விட்டு அவற்றிற்கு போதை மருந்தை ஏற்றி வெற்றி பெறச் செய்த மோசடிக் கும்பல் இது தான்.


பந்தய நிர்வாகிகளும் அங்கே வந்து சேர்ந்தனர்.
நீ...நீ...? உன் பாக்கட்டிலிருந்து லாங்க் சாம்ப்ஸ் பந்தயத்தின்போது ஒரு சிரிஞ்சை எடுத்தோமில்லையா சில தினங்களுக்கு முன்பு!
என்னை மாட்டிவிட இன்னொருவரால் போடப்பட்டது அது.. அன்றைக்கு அத்தனை விபரங்களையும் எடுத்துச் சொல்ல அவகாசம் இல்லாமல்...ஹி...ஹி...
அவர்கள் குதிரைக்கு ஏற்றியது அட்ரினலின் ஆகும். அது குதிரையின் உடம்பில் சுரக்கும் அட்ரினலினைப் போலவே இருக்குமாதலால் பரிசோதனையில் கண்டு பிடிக்க முடியாது.
இன்னொரு ஆசாமியும் அங்கு வந்து சேர்ந்தார்.
குதிரைப் பந்தய மைதானத்தில் இதுவரை யாரும் இம்மாதிரி பிரவேசம் பண்ணியிருக்க முடியாது ஜான். எனக்குத்தெரியும் வெற்றியை உறுதி செய்ய நீ எந்த சாகஸ விளையாட்டிலும் இறங்க தயங்கமாட்டாய் என்று.


Q-ஐந்து புன்னகை செய்தார்.
கடைசி நிமிடத்தில் முழு ஒத்துழைப்பு கொடுத்ததும் இந்த இளைஞன் தான்.
Q-பிரிவுக்கு புதிதாக ஆள்சேர்க்க நீங்கள் விரும்பினால் நான் டென்ஸிலை சிபாரிசு செய்கிறேன்... தேவையான திறமை அனைத்தும் இருக்கிறது அவனிடம்.
இனி வரும் நாட்களில் டென்ஸிலும் தானும் சேர்ந்து பணியாற்றினால் இன்னும் சிறப்பாக செயல்படமுடியும் என்று மனப்பூர்வமாக நம்பினார் ஜான்.
ஆபத்தான காரியங்களில் ஈடுபட உனக்கு' இயல்பாகவே ஆசையுண்டு... இனி அதற்கு ஒரு காரணமும் இருக்கும்
அனைத்துக்கும் நன்றி-ஜான்




தி மேத்தா பப்ளிகேஷன் நிறுவனத்திற்காக அச்சிட்டு வெளியிடுபவர்: R. அசோக் மேத்தா. முகவரி : 18, நேரு ரோடு, சிவகாசி-626 123. பதிப்பாசிரியர்: முல்லை தங்கராசன். வெளியீடு-6. செப்டம்பர்-1984




நான்கு புத்தகங்களுக்கும் ரூ. 6-00
அனுப்பினால் தபால்செலவு இலவசம்!
தனிப்பிரதி வேண்டுவோர் ரூ.1.70 அனுப்பவும்.

தி மேத்தா பப்ளிகேஷன் அண்ணாசாலை, சிவகாசி-626123.


அடுத்த வெளியீடு!
மரணத்தின் நிழலில்...!
மேத்தா காமிக்ஸ்
ரூ 1·50
தி மேத்தா பப்ளிகேஷன்,
அண்ணாசாலை, சிவகாசி-626123.